மகாத்மா சீடர்கள் ஆட்சியில் மக்கள் உரிமை பறிக்கப்படுகிறது

மாற்றுக்கட்சிகளை மக்களிடம் அண்டவிடாத அநீதி!

பாட்டாளிகள் ஒடுக்கப்பட்டு பாசீசம் வளர்க்கப்படுகிறது

இந்நிலை நீடித்தால் ஆட்சி முறை நிலைக்காது

ஆட்சியாளருக்கு ஜயப்பிரகாஷின் அபாய அறிவிப்பு!

இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்போருக்கு, அன்று தாங்கள் பேசியது என்ன என்டதே தெரியவில்லை. ஜனநாயகம் பற்றிய பேச்செல்லாம் ஏட்டளவோடே நிற்கின்றன.

சர்க்கார் உத்தியோகஸ்தர்களே கட்சி வேலையில் ஈடுபடுகின்றனர். காங்கிரஸ் கட்சிதான் அரசாங்கம்; அரசாங்கமே காங்கிரஸ் கட்சி என்ற நிலை இருப்பதால், பொதுமக்களின் உரிமைகளுக்கு ஆபத்து வளர்ந்து வருகிறது

வயது வந்தோர்க்கெல்லாம் ஓட்டுரிமை உண்டு என்று சொல்லப்படுகிறது. ஆனால், இந்த உரிமையின் அடிப்படையில் அமைக்கப்படும் ஆட்சியில், மாற்றுக்கட்சிகள் மக்களை அணுகி பிரசாரம் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.

தொழில்துறையிலும் இதே முறை கையாளப்படுகிறது. சுதந்திரமாகப் பணியாற்றும் தொழிற்சங்கங்கள் அனைத்தையும் அழித்தொழிக்க இந்த முறை அரசியலாருக்கு நல்லதோர் ஆயுதமாகப் பயன்பட்டு வருகிறது. இதனால் தொழிலாளர்களும் அடக்கப்படுகின்றனர்! இங்ஙனம் சுதந்திரத் தொழில் இயக்கங்களை அடக்கி ஒடுக்கிவிட்டு, சர்க்காருடைய ஆதரவில் தொழிற்சங்கம் ஏற்படுத்தப்படுகிறது. இது பாசிசத்தை வளரச் செய்யும் முறையேயன்றி வேறொன்றுமில்லை.

என்று, சமதர்மக் கட்சித் தலைவர் தோழர் ஜயப்பிரகாஷ் நாராயண் அண்மையில் பாட்னுவில் நடைபெற்ற குடிமக்கள் உரிமை மாநாட்டைத் துவக்கி வைத்தபோது குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "இந்த ஆட்சியாளர் அடிக்கடி மற்றொரு வாதம் புரிகின்றனர். அதாவது, 'இந்திய சுதந்திரம் ஒரு பச்சிளங் குழந்தை, இது இன்னும் சரிவர வளர்ச்சி அடையவில்லை. மனித உரிமைகளை வழங்குதல் போன்ற நடைமுறைப் பணிகளில் ஈடுபடுவதற்கு முன்பு, பேச்சளவில் அதனை நிலை நிறுத்தவேண்டும்' என்று சொல்லுகிறார்கள் மகாத்மா காந்தியின் சீடகோடிகளே இப்படிச் சொல்லுவது கண்டு ஆச்சரியப்படுகிறேன். எந்த அடிப்படையில் இந்தியாவை நாம் புதுப்பிக்கப்போகிறோம்? அமைதியையும், சமாதானத்தையும் நிலைநாட்டுவது மட்டுந்தானு நமது பணி? அவை பிரிட்டிஷார் கூடத்தான் செய்துவந்தார்கள்!" என்று பேசியுள்ளார்.

தோழர் ஜயப்பிரகாஷ், ஆட்சியாளரின் போக்கைக் கண்டித்தும் இம்மாநாட்டில் மேலும் பலப் பல பேசியுள்ளார். விரிவஞ்சி சுருக்கத்தை மட்டுமே மேலே தந்துள்ளோம். இந்த ஒரு சில உரைகள் மூலமே நாம் ஆட்சியாளரின் போக்கினையும், அது கண்டு உளம்நொந்து ஒருங்கே குழுமி உரிமைக்குப் போர் தொடுத்துள்ள குடியுரிமை மாநாட்டினரின் நிலையினையும் ஏன், தோழர் ஜயப்பிரகாஷின்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502
விலை அரை அணா

Regd. No. M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (18—4—50) வெளியீடு (19—4—50) [இதழ் 228

வழக்கறிஞர்களே நாட்டின் பாதுகாவலர்கள்

மக்கள் உரிமைகளை பாதுகாப்பதே அவர் நம் கடமை

நீதிமன்றத்திற்குச் சுதந்திரம் தராத ஆட்சி ஜனநாயக ஆட்சியாகாது

நீதி வழங்கும் சுதந்திரமும், திறமையும் நீதிபதிகளுக்குத் தேவை. இப்படிப்பட்ட நீதி முறையைக் கொண்டதே ஜனநாயக ஆட்சி முறையாகும் நீதி சரியானபடி வழங்கப்படாவிடில், சுதந்திரம் என்பவது வெறும் கேலிக்கூத்தேயாகும். இந்திய அரசியல் திட்டத்தில், பொதுமக்கள் அனைவருக்கும் அடிப்படை உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைக் குறிக்கோளாகக்கொண்டு, மக்கள் அவர்தம் அடிப்படை உரிமைகளைப் பெறச் செய்வதே நீதிமன்றங்களின் கடமையாகும்.

ஒரு ஒழுங்கான எதிர்க்கட்சி இல்லாத நாட்டில் எதிர்ப்புகள் அழிக்கப்படும். பத்திரிகைகளின் கருத்துரைகள் புறக்கணிக்கப்படும். ஆட்சி முறையில் யதேச்சாதிகாரம் குடிகொள்ள நேரிடும். எனவே, நீதிமன்றங்கள் முன் வந்து அரசியல் திட்டத்துக்கு மாறுபட்ட இத்தகைய நிலைமைகள் ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும்"

என்று கல்கத்தா முன்னாள் நீதிபதி தோழர் என். ஸி. சட்டர்ஜி ஜெய்ப்பூரில் நடைபெற்ற ராஜஸ்தான் வழக்கறிஞர் மாநாட்டுக்குத் தலைமைவகித்துப்பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் பேசியதாவது:—

வழக்கறிஞர்கள் நாட்டில் நீதி நிலைக்கும்படியும், நீதிபதிகளுக்கு நீதி வழங்கும் விஷயத்தில் போதிய சுதந்திரம் கிடைக்கும்படியும் செய்ய வேண்டும். நீதிபதிகள் நாட்டிற்குத் தமது கடமையைச் செய்ய வேண்டும், அப்படிச் செய்வதனால், மக்களின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்புத் தேடுவது மட்டும் போதாது. தனிப்பட்ட மனிதன் ஒவ்வொருவருக்கும் அது கிடைக்கும்படி செய்வதன் மூலம். இந்த அடிப்படை உரிமையின் அளவை அதிகரிக்கச் செய்யவேண்டும் தனிப்பட்ட மனிதனின் விடுதலையில்தான், சமுதாயநலம் அமைந்துகிடக்கிறது. வழக்கறிஞர்களாகிய நீங்களே நாட்டின் பாதுகாவலர்கள், இந்தியக் குடியரசின் கொடி பறந்திடச் செய்தும் அதேசமயத்தில் மக்களின் விடுதலையும், உரிமையையும் பாதுகாப்பதும் உங்களுடைய கடமைகளாகும்" என்று கூறினார்.

தலாய்லாமா தப்பி ஓட பார்க்கிறார்

லண்டன், ஏப். 17—

திபேத்தில் சீனக் கம்யூனிஸ்டுகள் புகுந்து நிலைமை மோசமாகி விட்டால் தலாய்லாமா உடனே தப்பிச்செல்ல ஒரு விமானம் லாஸாவில் தயாராக வைக்கப்பட்டிருப்பதாக 'ஸண்டே எக்ஸ்பிரஸ்' நிருபர் கூறுகிறார்.

லாஸா 11890 அடி கடல் மட்டத்திற்குமேல் இருக்கிறதென்றும், எனவே விமானம் இறங்கி புறப்படும் வசதியில்லாததால் தயாராக வைக்கப்பட்டுள்ள விமானம் ஒரு ஹெலிகாப்டராகவே இருக்கவேண்டுமே என்றும் அவர் கூறுகிறார்.

சுஷான் தீவுகள் தாக்கப்படலாம்

லண்டன், ஏப். 17—

சீன கம்யூனிஸ்டுகளிடம் ரஷ்யாவிடமிருந்து வந்த விமானங்கள் இப்போது போதிய அளவுக்கு இருப்பதால் சுஷான் தீவிலுள்ள சியாங் படைகளின் தளத்தை அவர்கள் சீக்கிரமே தாக்கலாம் என்று, சீனதேசியப் படையினர் எதிர்பார்க்கின்றனர்.

தொல்லையைத் தீர்க்க புதிய திட்டம்

—(0)—

வாஷிங்டன் வட்டாரக் கருத்துகள்

வாஷிங்டன், ஏப். 17—

ஸ்டர்லிங் கடன் தொல்லையைத் தீர்த்துக்கட்ட பிரிட்டிஷ் சர்க்கார் ஒரு புது திட்டம் வகுத்திருப்பதாகவும், இத்திட்டத்தின் விவரம், அமெரிக்க, பிரிட்டிஷ், கனடிய பொருளாதாரக் கமிட்டியிடம் இன்னும் சிலதினங்களுக்குள் சமர்ப்பிக்கப்படலாம் என்றும் தெரிகிறது. இதன் முடிவாக ஒரு தீர்மானமாக ஏற்பாடு செய்யப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்த ஸ்டர்லிங் கடன் பிரச்னை, பிரிட்டனின் பொருளாதாரநிலையைப் பாதித்து வருவதுடன், தென்கிழக்கு ஆசியாவின் நிலைமையையும் ஓரளவுக்கு சம்பந்தப்படுத்துவதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவ்விஷயமாக கடனைத் தீர்க்க யுனைடெட்ஸ்டேட்ஸுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவது குறித்து, பிரிட்டன் காமன்வெல்த் நாடுகளைக் கலந்தாலோசித்ததாகவும், இந்த யோசனையை அமெரிக்கா எப்படி ஏற்றிருக்கிறது என்கிற விஷயம் ஸிட்னி காமன்வெல்த் மாநாட்டில் தெரிந்துவிடும் என்றும் கூறப்படுகிறது.

இத்திட்டத்திற்கு அமெரிக்கா இசைந்தால், பிரிட்டன்டாலர் உதவி பெற்று ஸ்டர்லிங்கடன்நாடுகளுக்குக் கொடுப்பதா, அல்லது இந்தியா முதலிய ஸ்டர்லிங் கடன் கொடுத்துள்ள நாடுகளுக்கு நேரிடையாக டாலர் கிடைக்கும்படி செய்வதா என்பது இனி தீர்மானிக்கப்படவேண்டும்.

ஸ்டர்லிங் கடன் கொடுத்துள்ள நாடுகளிடம்நேரிடையாகவேகடனைக் கொடுத்துவிட வாஷிங்டன் விரும்புவதாகக் கூறப்படுகிறது. இப்படி செய்வதாகஇருந்தால், இந்தத்திட்டத்திற்கு காங்கிரஸின் அங்கீகாரம் எளிதில் கிடைத்துவிடலாமாம். ஆனால் யுனைடெட்ஸ்டேட்ஸ் கிழக்கு நாடுகளுக்கு இவ்வுதவியைத் தன்னிடம் விசை வைத்துக் கொள்ளாமல் கொடுத்துதவுமா என்பதே இப்போதுள்ள கேள்வி.

கடனைக் குறைத்துவிடும் எண்ணம் எதுவும் இருக்காது என்று, வாஷிங்டன் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

இந்தியா-பாக் உடன்படிக்கை பயன்தரவேண்டும்

—(0)—

'ஸ்குருடேடர்' கருத்து

லண்டன், ஏப். 17—

இந்தியாவும் பாகிஸ்தானும் ஒரு பெரும் போரில் ஈடுபடுவதைப் பண்டித நேருவும், லியாகத் அலியும் தடுத்துவிட்டனர். இதனால் அவர்கள் போக்கை சிலர் ஆட்சேபித்த போதிலும் அவர்களுடைய உயிருக்கே ஹானி ஏற்படக் கூடிய நிலையிலும் அவர்கள் தீரமாக நடந்து ஒத்துழைக்க முன்வந்தது, பாராட்டப்பட வேண்டியதாகும் என்று, 'ஸண்டேடைம்ஸ்'ஸில் ஸ்குருடேடர் எழுதியிருக்கிறார்.

யுத்தம் என்று ஏற்பட்டால் இரு நாடுகளுக்கிடையே மட்டுமின்றி, உலகத்திற்கே ஆபத்தாக முடிந்திருக்கும் என்றும் இந்த உடன்படிக்கையைத் துரிதமாக அமுல் நடத்த வேண்டியது அவசியம் என்றும் அவர் எழுதியிருக்கிறார்.

மாலை மணி

சென்னை 18—4—50 செவ்வாய்க்கிழமை

தமிழாசிரியர் நிலை

பள்ளிகளில் தமிழ் முதன்மொழி என்று கருதும் நிலை, இப்பொழுது ஓரளவுக்கு ஏற்பட்டு விட்டது. ஆனால், தமிழாசிரியர்களின் நிலையோ, இன்னமும் இறுதி நிலையாகத்தான் இருந்து வருகிறது. ஏனோ இந்தக் கொடுமை?

தமிழ் முன்னேறி முதலிடம் பெற்றுள்ளது—மகிழ்ச்சிக்குரிய நிலை! தமிழாசிரியர்கள் இருந்த இடத்திலேயே வைக்கப்பட்டிருக்கிறார்கள்—பரிதாபத்திற்குரிய, வெட்கப்படத்தக்க நிலை!

தமிழுக்கு முதலிடம்,—அதனைப்போதிக்கும் ஆசிரியர்களுக்கு இடம் இறுதியில்! இந்த விசித்திரமான, ஆனால் பரிதாபகரமான காட்சி இந்த நாட்டுப் பள்ளிகளில் நின்று நிலவுகிறது. அரசாங்கம் ஏற்று நடத்தும் பள்ளிகளிலும் சரி, தனிப்பட்டவர்களின் கண்காணிப்பில் நடைபெறும் பள்ளிகளிலும் சரி, இந்த அவல நிலை இருக்கத்தான் செய்கிறது. இந்தக்கொடுமையைக் களைந்தெறிந்து, தமிழாசிரியன்மார்களுக்குக் கொடுக்க வேண்டிய தகுதி நிலையைக் கொடுக்க முன்வரும் ஆளுனர் யாரும், நாட்டின் ஆட்சிப் பீடத்திலும், பள்ளி ஆதிக்க பீடத்திலும் ஏற்படாதது வருந்தத்தக்கது தான்.

ஒருகாலத்தில் பள்ளிகளில் தமிழாசிரியராக வருவோர் பரிதாபத்திற்குரியவர்களாகவே இருந்தார்கள். கிழிந்தகோட்டு, ஒடிந்த குடை — உடைந்த மூக்குக்கண்ணாடி— அழுக்கு ஏறிய தலைப்பாகை—நீர்க்காவி படிந்த வேட்டி—வேட்டியிலும் சில தையல்கள்—வெற்றிலைப் பாக்குச் சாயம் படிந்த வாய்—மயிர் வளர்ந்த முகம்—காது அறுந்த செருப்பு, இவையே தமிழாசிரியர் பெரும்பாலோரின் வெளித்தோற்ற உடைமைகளாக இருந்துவந்தன. வறுமை அந்த அளவுக்கு அவர்களின் வாழ்வை வளைத்து வைத்திருந்தது. தமிழாசிரியர்கள் ஆரம்பகாலங்களில் குறைந்த அளவு சம்பளத்திற்கே வேண்டப்பட்டார்கள், அவர்கள் எவ்வளவு குறைந்த சம்பளத்திற்கும் வந்துவிடக்கூடும் என்ற காரணத்தால் தமிழாசிரியர்கள் குறைந்த 'விலைக்கே' எடுக்கப்பட்டார்கள்—"குறைந்த விலை"க்கே போகும்படி புலவர்களின் வறுமையும் தூண்டிவிட்டது. வறுமையால் வாழ்விலே தரம் குறைக்கப்பட்டிருந்த தமிழாசிரியர்கள், சம்பளத்தாலும் தரம் குறைத்துக் காட்டப்பட்டார்கள். மாணவர்களும் தமிழாசிரியர்களின் தரத்தை மற்றத்துறையாசிரியர்களின் தரத்தைவிட மிகக் குறைவாகவே மதிப்பிட்டு நடந்து வரலாயினர். இப்படியாகப் பலவழிகளிலும் தமிழாசிரியர்கள் பரிதாபத்திற்குரிய 'பஞ்சை'களாகவே இருந்துவந்தார்கள். தமிழும் அப்படிப்பட்ட நிலையிலேதான் வைத்து எண்ணப்பட்டு வந்தது

இப்பொழுது தமிழின் சிறப்பையும், திறத்தையும், அதன் அவசியத்தையும் மக்கள் உணரத் தொடங்கிவிட்டார்கள் என்பது மட்டுமல்லாமல், அதன் தகுதி, மதிக்கத்தக்க நிலையில் பள்ளிகளில் வைக்கப்பட்டுவிட்டது ஆனால் தமிழாசிரியர்களின் நிலை அவமானச் சின்னமாகவே இன்னமும் ஆட்சியாளரால் கருதப்பட்டு வருகிறது

ஆங்கிலம், கணிதம், வரலாறு விஞ்ஞானம், நிலநூல் முதலியபாடங்களைப்போலவே தான், தமிழும் ஒருபாடப்பகுதியாக கணக்கிடப்பட்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமானால், தமிழ் முதன்மொழிப் பாடமாகக் கருதப்படுகிறது. இவைகளையெல்லாம் கற்றுக்கொள்கிற மாணவர்களும் ஒரே குழுவினர் தாம். அப்படி இருந்தும், மற்ற எல்லாத்துறை ஆசிரியர்களுக்கு ஒருவித சம்பளத் தொகையும், தமிழாசிரியர்களுக்கு மட்டும் அந்தஅளவை விடக் குறைந்த சம்பளத் தொகையும் கொடுக்கப்படுகின்றன வென்றால், இந்தப் பாகுபாட்டை நடுநிலை அறிவுடையோர் யார்தான் பொருத்துக் கொண்டிருக்க முடியும். மற்ற ஆசிரியர்களுக்குக் கொடுக்கும் அதே விகித சம்பளத்தை. ஏன் தமிழாசிரியர்களுக்குக் கொடுக்கக் கூடாது? எந்த விதத்திலே குறைந்தவர்களாகக் காணப்படுகிறார்கள் தமிழாசிரியர்கள்? காரணம் என்ன? எங்கே விளக்கம்? ஏன் இப்படிப்பட்ட அர்த்தமற்றப் பாகுபாட்டை வைத்துக்கொண்டு தமிழாசிரியர்களை அல்லலுக்குள்ளாக்குவதன்றி, தமிழுக்கும், அதனைப் போதிக்கும் ஆசிரியருக்கும் அவமானத்தைத் தேடித்தர முனைந்துள்ளது அரசாங்கம்?

தமிழாசிரியர்களில் பலர் ஆங்கிலம் தெரியாதவர்களாக இருக்கலாம். அது தமிழ்ப் பாட போதனைக்கு அவசியம் இருந்து தீரவேண்டியதொன்றல்லவே. ஆங்கில அறிவு இல்லாமை, தமிழறிவுடைமையைக் குறைத்து மதிப்பிடுவதற்கான அளவுகோலல்லவே! மற்றப்பாடங்களைப் போதிப்பவர்களைப் போலவே, தமிழாசிரியர்கள் அதே வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்ப் பாடம் போதனை செய்கிறார்கள். பின் ஏன் தரம் குறைத்து. சம்பளம் குறைத்துக் காட்டப்படவேண்டும். இந்தக் கொடுமையை அகற்ற தமிழறிஞர் பலரும் முன்வரவேண்டியது அவர்களின் நீங்காக் கடமையாகும்.

தமிழுக்கும், தமிழாசிரியர்க்கும் உயர்வு தேடித் தருவதில் அவ்வளவு அக்கரை காட்டாத அரசாங்கந்தான் தன் போக்கில் போய்க்கொண்டிருக்கிறது என்றால், தமிழுக்கு ஆக்கம் அளிக்கும் கல்லூரிகள் என்று நம்மால் எண்ணப்பட்டு வந்தவைகளும் அந்தப் பாதையையே கடைபிடிக்கும்போது உள்ளம் வேகாமல் எப்படி இருக்கும். தியாகராய செட்டியார் கல்லூரி வண்ணையம்பதியிலே ஏற்படப்போகிறது என்ற செய்தியைக் கேள்வியுற்றவுடனேயே மகிழ்ந்தோம். அதன் கண்காணிப்பாளர்கள் தமிழார்வம் உடையவர்களாக இருப்பார்கள்; கல்லூரியில் தமிழ் மணங் கமழும்; தமிழுக்கு உரிய இடம் கிடைக்கும்; தமிழாசிரியர்கள் நல்ல நிலையிலேயே வைக்கப்படுவார்கள் என்றெல்லாம் எண்ணினோம். தமிழாசிரியர்களைக் 'குறைந்த விலை'க்கே பெற்றுக்கொள்ளும் கோணல் புத்தி, அதன் நிர்வாகிகளுக்கு ஏற்பட்டிருப்பது காண ஆச்சரியம் ஒருபக்கம் உண்டானாலும், ஆத்திரங்கொள்ளாமலிருக்க முடியவில்லை

ஆங்கிலம், கணக்கு, இயற்கைப் பொருட்பாடம் (Physics), கலவைப்பொருட்பாடம் (Chemistry), வரலாறு, வாணிகம் தத்துவம் போன்ற பாடங்களைப் போதிக்கும் விரிவுரையாளர்களுக்கு மாதச்சம்பளம் ரூ 100 என்றும், அது ஆண்டு ஒன்றுக்கு ரூ 10 ஆகக் கூட்டப்பெறும் என்றும், ரூ 250 வரையில் சென்று நிற்கும் என்றும் அக்கல்லூரி நிர்வாகியால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதே போது தமிழ் அல்லது தெலுங்கு விரிவுரையாளருக்கு மாதச்சம்பளம் ரூ 75 என்றும் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5 மட்டுமே கூட்டப் பெறும், என்றும், ரூ. 125 வரைதான் சென்று நிற்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. தியாகராய செட்டியார் கல்லூரி நிர்வாகிக்கு எப்படித்தான் மனந் துணிந்ததோ, இப்படிப்பட்ட கொடுமையைத் தமிழ்க் கற்றோர்க்கு இழைக்க! தமிழுக்கும் தமிழர்க்கும் தீங்குதேடித்தருபவர்கள் தமிழர்களாகவே—இருப்பதைக்காண வெட்கப்படுகிறோம்—வேதனைகொள்கிறோம். தமிழாசிரியர்க்குக் கொடுமை இழைக்கும் கறையை ஏற்றுக்கொள்ளாத வகையில் நிர்வாகிகள் திட்டத்தை மாற்றிக்கொள்வார்கள் என்று கருதுகிறோம் இல்லையேல், தமிழுலகம் நிச்சயம் காரியுமிழும் என்பதை, எச்சரிக்கைப்படுத்த இப்பொழுதே விரும்புகிறோம்.

பச்சையப்பன் கல்லூரியிலும் தமிழ் விரிவுரையாளர்களிடத்தே ஆங்கிலம் படித்தவர்க்கும், தமிழ் மட்டுமே கற்றோர்க்கும் பாகுபாடு கற்பித்து ஊதியம் வழங்கப்படுகிறது என்றும் கேள்வியுறுகிறோம், தமிழோடு ஆங்கிலப் படிப்பும் படித்த தமிழ் விரிவுரையாளர்களின் சம்பளம் ரூபாய் 100-லிருந்து ரூ. 250 வரை செல்லுகிறது என்றும், தமிழ் மட்டுமே பயின்று இருக்கிற விரிவுரையாளர்களுக்கு ரூபாய் 100-லிருந்து ரூ. 150 வரை தான் செல்லுகிறது என்றும் சொல்லப்படுகிறது. இரண்டுவித விரிவுரையாளர்களும் ஒரே வகை சாரத்தை ஒரே வகுப்பு மாணவர்களுக்குத்தான் பயிற்றுவிக்கிறார்கள். இருந்தும் அவர்களிடையே பாகுபாடு காண்பிப்பது ஏன்? இந்த அநீதியைப் போக்குவதற்குப் பச்சையப்பன் டிரஸ்டு போர்டு ஆவன செய்து, தன்மீது உள்ள மாசினைப் போக்கிக் கொள்ள முயலும் என்று கருதுகிறோம்.

உயர்நிலைப்பள்ளிகளிலும் இத்தகைய அவசியமில்லாத பாகுபாடுகள் கற்பிக்கப்பட்டு, அதற்கேற்ப சம்பளம் தரப்படுவதாக அறிகிறோம். மாணவர்கள், வித்வான் அல்லது புலவர் பட்டம் பெறுவதற்கான தேர்வு முறைகளிலும் அர்த்தமற்றப் பல தடைகள் விதித்துள்ளார்கள் அரசியலார். இந்தக் கொடூர செயல்கள் எல்லாம் அறவே களைந்தெறியப்பட்டு ஒருவகை நீதி பள்ளிகளில் நிலவும்படி செய்தல்வேண்டும்.

தமிழுக்கும், தமிழாசிரியர்களுக்கும் உரிய இடங்களையும், மதிப்பையும் கொடுக்க ஆட்சியாளரும், பள்ளி பாதுகாப்பாளரும் இனியேனும் முனையவேண்டும் என்று அவர்களை வற்புறுத்துகிறோம். "ஆவன செய்க! இன்றே செய்க! நன்றே செய்க! அதனைச் செய்ய விழித்தெழும் தமிழிளைஞர் உலகம் காத்துக்கொண்டிருக்கிறது! நீரே செய்வீர்! அல்லது வழிவிடுவீர்!" என்று அவர்களுக்குக் கூற ஆசைப்படுகிறோம்.

மகாத்மா சீடர்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளக்குமுறலையும் ஓரளவாறு யூகித்தறியலாம்.

"தனிப்பட்டோரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்றார்கள்; அது உதட்டளவோடு சரி!"

வயது வந்தோர்க்கெல்லாம் வாக்குரிமை உண்டு; அதன் அடிப்படையிலேயே ஆட்சிமுறை அமைய வேண்டும் என்றார்கள்: ஆனால் மக்களிடம் நெருங்க மாற்றுக் கட்சிகளுக்கு அனுமதியில்லை."

தொழிலாளர் இயக்கங்கள் நசுக்கப்படுகின்றன. பாசிசம் வளர்க்கப்படுகிறது அரசியலாராலேயே.

இவை நாம், இந்திய ஆட்சியாளர் மீது தோழர் ஜயப்பிரகாஷ் சாற்றியுள்ள குற்றச்சாட்டுகள். இவை நமக்குப் புதியவையல்ல, ஆயினும், "அதோ பாருங்கள் அவரும் கூறுகிறார்" என்று சுட்டிக் காட்டும் முறையிலேயே இதனை எடுத்துக் காட்டுகிறோம்.

நாம் கூறிடும் அளவையும் தாண்டி ஆட்சியாளரின் அடிப்படைக் குற்றங்களை அழகுற எடுத்துக் காட்டுகிறார். அது மட்டுமல்ல, ஆட்சியாளர் இக்குறைபாடுகளை நீக்க முயலாவிடில், ஆட்சிப்பீடம் ஆட்டங்கொடுத்துவிடும் என்பதை சொல்லாமற் சொல்லி எச்சரிக்கிறார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"மக்களுடைய இயக்கங்கள் அமைதியான முறையில் நடைபெற இடமளிக்கப்படாவிட்டால், எந்த ஆட்சிமுறையும் அமைதியான முறையிலே மாற்றப்பட மாட்டாது என்கிறார்."

இதனைச் சுருங்கச் சொல்ல வேண்டுமானால், தோழர் ஜயப்பிரகாஷ் ஆட்சியாளருக்குச் சவால் விடுக்கிறார் என்றே சொல்லவேண்டும்.

மேலே, "மாற்றுக் கட்சிகள் இயங்க ஆட்சியாளர் அனுமதி தருவதில்லை; அவை மக்களுடன் தொடர்பு கொள்வதைத் தடைசெய்கின்றனர்" என்று கூறிவிட்டு இங்கே, மக்கள் இயக்கங்கள் இயங்க உரிமை அளிக்கப்படாவிடில், எந்த ஆட்சியும் அமைதியான முறையிலே மாற்றப்படமாட்டாது" என்று கூறுகிறார். இதனை ஆட்சியாளருக்கு ஓர் அபாய அறிவிப்பு என்றே சொல்லவேண்டும்.

விசாரணை நடத்துக!

கும்பமேளாபற்றி ம. மா. சர்க்கார் உத்தரவு

கும்பமேளா 'முழுக்குவிழா'வில் 30 பேர் மாண்டது குறித்து, விசாரணை நடத்துமாறு ஐக்கிய மாகாண சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது. இவ்விசாரணையை நடத்த ஷரன்பூர் மாவட்ட மாஜிஸ்ரேட் தோழர் எஸ். எச். ஷா ஹரித்துவார் முனிசிபாலிட்டி தலைவர் எச் பி. திருப்பதி, மற்றும் சில உத்தியோகப்பற்றில்லாதவர்கள், போலீஸ் அதிகாரிகள் சிலர் ஆகியோர் இந்த விசாரணைக் குழுவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ரயிலிலிருந்து குதித்த சிறுவன்

சென்னை, ஏப். 15—

நேற்றுமாலை கிண்டி ரயில்வே ஸ்டேஷனில் வண்டி நிற்பதற்கு முன், வண்டியிலிருந்து குதித்த பரங்கிமலை வாசியான குப்புசாமி என்னும் எட்டு வயது சிறுவனுக்குப் பலத்த காயம் பட்டது. காயமடைந்த சிறுவனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்கு அனுப்பினர் சிறுவன் நிலைமை கவலைக்கிடமாயிருக்கின்றதாம்.

இனி நடப்பவை

மணக்கால் (லால்குடி):-20-4-50 வியாழன் இரவு 8-மணிக்கு தோழர் ம.பெ.சோமசுந்தரம் அவர்களின் இல்லத்தில், தி. மு. கழகக் கமிட்டித் திருத்தக் கூட்டம் நடைபெறும். அதுபோது கழக ஆக்க வேலை குறித்துப்பேசவேண்டியிருத்தலால், உறுப்பினர்கள் தவறாது வருகைதரக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

• • •

சென்னை:—மயிலைத் திருவள்ளுவர் கழக 5-வது மாநாடு, 22, 23–4–50 தேதிகளில், சென்னை மயிலை வீரபெருமாள் கோயில் தெரு கார்ப்பரேஷன் பள்ளி மைதானத்தில், மூவேந்தர் பந்தலில் நடைபெறும்.

சர்வகட்சித் தலைவர்களும், அறிஞர்களும் கலந்துகொள்வார்கள்.

23–4–50 இரவு "பலியின் கொடுமை" நாடகம் நடைபெறும்.

• • •

நாகர்கோவில்:— 21–4–50 வெள்ளிமாலை 5 மணிக்கு நகரசபைத் திடலில் த. தி. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் மு. கருணாநிதி, இ. மனோகரன், வை. சுப்பிரமணியம் முதலியோர் பேசுவார்கள்.

பீடி, சிகரெட் பிடிப்பவர்களுக்கு ரூ. 20 வரை அபராதம்?

தென்னிந்திய ரயில்வே அதிகாரிகளின் சுற்றறிக்கை

சென்னை, ஏப்ரல் 17—

தென்னிந்திய ரயில்வேயிலுள்ள ஸ்டேஷன் மாஸ்டர்கள், கார்டுகள், டிக்கட் பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களுக்கு, சமீபத்தில் அனுப்பியுள்ள ஒரு சுற்றறிக்கையில் வண்டிக்குள் சுருட்டு, சிகரட் முதலியவைகளை பிரயாணிகள் பிடிப்பது குற்றமென்றும், அப்படிப்பிடிக்கவேண்டுமென்றால் அவ்வண்டியிலுள்ள இதரப் பிரயாணிகளின் அனுமதி பெறவேண்டுமென்றும் ரயில் அதிகாரிகள் கூறியிருக்கின்றனர். இதை மீறி நடக்கும் பிரயாணியைக் கைது செய்ய வேண்டுமென்றும், கீழ்கண்டுள்ள முறையைக் கையாளவேண்டும் என்று அதிகாரிகள் கூறியிருக்கின்றனர்:—

சிகரெட் பிடிப்பதை அங்கீகரிக்காத பிரயாணி ஒருவர் தன் பெயரும், விலாசமும் ஸ்டேஷன் மாஸ்டரிடமோ, அல்லது கார்டிடமோ, அல்லது டிக்கட் பரிசோதனைசெய்யும் இதை நேரிற் கண்ட உத்யோகஸ்தரிடமோ புகார் செய்யவேண்டும். குற்றம் செய்தவரின் பெயரையும், விலாசத்தையும்ரயில்வேஉத்தியோகஸ்தர்கள் பெறவேண்டும்.

ஆனால், ரயில் உத்யோகஸ்தர்கள் சிகரட் முதலியவற்றை பிடிப்பதைத் தாங்கள் நேரில் காணு விருந்து,பின்னர் புகார் பெறுல், புகார் செய்கின்ற வரே மனு செய்யவேண்டுமென்று கூறப்படுகிறது.

ஒரு பிரயாணி தன்னுடன் பிரயாணம் செய்யும் இதர பிரயாணிகளின் அனுமதியின்றி சிகரட், பீடி, சுருட்டு போன்றவற்றைப் பிடித்தால் இந்திய ரயில்வே சட்டம் ஸெக்ஷன் 110 (1) கீழ் குற்றவாளி என்றும், 20 ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

வரதட்சணை வாங்குவோருக்கு 6 மாத சிறை

பீஹாரில் சட்டம்

பீஹார் வரதட்சணைத் தடை மசோதாவை ஷை மாகாண அசெம்பிளி இன்று அங்கீகரித்தது. வரதட்சணை வாங்குவோருக்கு 6 மாதம்வரை சாதாரண சிறைத் தண்டனையோ, வரதட்சணைத் தொகையின் மதிப்புக்குச் சமமான அளவு அபராதமோ இரண்டுமே விதிக்க இந்த மசோதாவில் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

வரதட்சணை கொடுப்பவர்அல்லது வரதட்சணைக்கு உடந்தையாக இருப்பவருக்கு ஒரு மாத சாதாரண சிறைத் தண்டனையோ அல்லது ரூ. 1000 அபராதமோ அல்லது இரண்டுமே விதிக்கப்படலாம்.

இந்த மசோதா ஹிந்துக்கள், ஜைனர்கள், சீக்கியர்கள், ஆகியோருக்கு முதலில் பொருந்தும். ஆனால் மாகாண சர்க்கார் ஓர் அறிக்கையின் மூலம் மூஸ்லீம்களுக்கும் இதைப் பிரயோகிக்கலாம் என்று அறிவித்துள்ள உத்தியோகத் தொடர்பற்ற இந்த மசோதாவை, காங்கிரஸ் அங்கத்தினராகிய தோழியர் சுந்தரிதேவி கொண்டுவந்தார்.

இந்து சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு

தீர்மானம் நிறைவேற்றிய கழகங்கள்

(தொடர்ச்சி)

மாதவரம்
இராஜபாளையம்
பரமக்குடி
புளியந்தோப்பு
விருகம்பாக்கம்
கோடம்பாக்கம்
மணக்கால்
தென்காசி
மழுசாபுரம்
பெரியகுளம்
ஜமீன் ஆலமரத்துப்பட்டி
பலராமபுரம்
மணக்கால்
தூத்துக்குடி
பெருந்தோட்டம்
திருவில்லிபுத்தூர்

மற்றைய கழகம்

கோவை (தி. மு. மா. மன்றம்)

4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தோர் வாழ்க்கை நிலை

நியூயார்க், ஏப். 17—

4000 வருஷங்களுக்கு முன் சுமேரியர்கள் எத்தகைய வாழ்க்கை நடத்தினர் என்ற விவரம் இராக்கில் நிப்பூர் என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்ட சுமார் 700 களிமண் கட்டிகளில் காணப்படும் எழுத்துக்களிலிருந்து தெரியவருகிறது.

இக்களிமண் கட்டிகளில் கவிதைகள், கட்டுரைகள் வழக்கு விசாரணைகள் முதலிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. இவைகளிலிருந்து சுமேரியர்களின் வாழ்க்கை சம்பந்தமான விவரங்கள் கிடைத்திருக்கின்றன.

இதே இடத்தில் 141 அடி நீளமும், 69 அடி அகலமும் உள்ளதும், 10 அடி உயரமுள்ள சுவர்களுடையதுமான ஒரு கோவில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இவைகள் எல்லாம் கி. மு. 2200 வருஷத்திலிருந்து கி. மு. 600 வருஷங்களுக்கிடையேயுள்ளதாக இருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

ஒரு பயில்வானின் விசித்திர ஆசை

லோனஸ் அபர்ன்,ஏப். 17—

ஈயூஜே செஸ்லர் ஓர் விசித்திர ஆசையைத் தெரிவித்து அதற்கு அதிகாரிகளிடமிருந்து அனுமதி கேட்டிருக்கிறர்.

அவருடைய ஆசை இதுதான்:- ஒரு ஹரிகானடவின் கழுத்தில் சுருக்கிட்டுத் தொங்கவேண்டுமாம், ஒரு கையில் கிட்டார் வாத்தியம் வாசித்துக்கொண்டே மற்றொரு கையில் 'டீ' எடுத்துக் குடிக்கவேண்டுமாம்.

அமெரிக்காவில் பிரிட்டிஷ் கார் விற்பனை

லண்டன், ஏப். 17—

யுனைடெட் ஸ்டேட்ஸில் விற்பனைக்காக இருக்கும் பிரிட்டிஷ் மோட்டார்கார்களை வாங்குவோர்களுக்கு, கொண்டுபோய் காட்ட நியமிக்கப்பட்டுள்ளவர்கள், லண்டன் போலீஸ்காரர் மாதிரி உடைதரித்து இருப்பார்கள் என்று தெரியவருகிறது.

இதாலி-யூகோ உறவு

ரோம், ஏப். 17—

இதாலி யூகோ உறவு சம்பந்தமான பிரச்னைகளை எல்லாம் விவாதிக்க இதாலியப் பிரதமர் காஸ்பிரி தன் மந்திரி சபையின் அவசரக் கூட்டத்தைக்கூட்டியிருக்கிறர்.

பிரிட்டன், பிரான்ஸ், யுனைடெட் ஸ்டேட்ஸ் ஸ்தானிகர்கள் இதாலிய அயல் நாட்டு மந்திரி ஸ்போர்ஸாவைச் சந்தித்துப் பேசியதாகத் தெரிகிறது.

பெல்ஜிய மக்களுக்கு லியோபால்டு யோசனை

பிரஸ்ஸெல்ஸ், ஏப். 17—

தன் ரேடியோ பிரசாரத்தில் மன்னர் லியோபால்டு அதிகாரத்தை, பாடோயன் இளவரசருக்கு அளிப்பதாகக் கூறியது, பெல்ஜியத்தில் பெருங் குழப்பத்தை விளைவித்திருக்கிறது என்று ப்ளோப் கிருமர் கூறுகிறர்.

கத்தோலிக்க கட்சி மெஜாரிட்டியைப் பெறும்போது மன்னர் பதவிக்கு மீண்டும் லியோபால்டுக்கு இதனால் வழி ஏற்படுமென்றும் கூறப்படுகிறது.

மன்னர் அடியோடு முடி துறக்க வேண்டும் என்று லிபரல்களும், சோஷலிஸ்டுகளும், கூறுகின்றனர்.

விமானத்தில் ஏற்பட்ட மர்ம வெடி விபத்து

லண்டன், ஏப். 17—

28 பிரயாணிகளுடன் பாரிஸ் சென்ற ஒரு விமானத்தில்,வெடி விபத்து ஏற்பட்டது குறித்து பிரிட்டிஷ் பிரெஞ்சுப்போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர்.

விமானத்திற்குள் இருந்து வெடிக்கக்கூடிய 'டைம்பாம்' வைக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது.

காமன்வெல்த் ராணுவ மாநாடு

லண்டன், ஏப். 17—

காமன்வெல்த் ராணுவ சம்பந்தமான விஷயங்களைப் பற்றி இங்கு கூடவிருக்கும் மாநாட்டில் இந்தியாவும், பாகிஸ்தானும் கலந்துகொள்ளும் என்று தெரிகிறது.

மைசூரிலுள்ள இந்தியப் பிரஜைகளுக்கும், இந்தியாவின் பாதுகாப்பில் உள்ளோருக்கும் பாஸ்போர்ட் வழங்கும் அதிகாரத்தை மைசூர் ராஜப் பிரமுகருக்கு ராஷ்டிரபதி அளித்திருக்கிறர். மைசூர் சர்க்கார் பிரதம காரியதரிசிக்கு ராஜப் பிரமுகர் இந்த அதிகாரத்தை அளித்திருக்கிறர்.

தி. மு. க. தலைமை நிலைய கட்டிட நிதி

		ரூ. அ. பை.
முன்வரவு	...	544-8—0
ஆர், பாண்டியன்,	வடசென்னை	5-0—0
எம். சேர்மென்	,,	2—0-0
பி. கே. மாரியப்பன்	,,	2—0—0
என். தனபால்,	,,	1—0-0
ஜி முத்தையா,	,,	1—0-0
கே. கோவிந்தசாமி,	,,	1—0—0
டி. எஸ். ராமமூர்த்தி,	,,	1—0—0
எஸ். முனுசாமி,	,,	1-0—0
கே. கணேசன்,	,,	1—0—0
எம். ஆர். ராஜபாண்டியன்,	,,	1-0—0
ஆர். டி. சாமி,	,,	2—0—0
என். பி. சாமி,	கோயமுத்தூர்	2—0—0
கே. என். காசவராஜ்,	குடியாணகுப்பம்	2—0-0
பி. எம். குப்புசாமி,	அரூர்	5—0—0
தி. மு க.—வேலூர் (வ. ஆ) கிளை		15—10-0
உ ராஜம்மாள்,	விருதுநகர்	25—0—0
பி ஆர். சீனிவாசன்,	சீரங்கம்	1—0-0
பி. ஆர். குஞ்சப்பா,	,,	1—0—0
வி. நாகப்பன்,	,,	1-0—0
எல். எஸ். ராதாகிருஷ்ணன்,	சீரங்கம்	1—0—0
கே. எஸ். எஸ். அய்யாசாமி,	விருதுநகர்	10—0—0
தமிழ்ப் பொழில் மன்றம்,	மதுரை	15—0-0
தி. மு. க. கச்சமங்கலம் கிளை		12—0-0
தி. மொ. முருகேசம்,	குடியேற்றம்	2—0-0
ந. முருகையா,	திசையன்விளை	1—1—0
கே ராமதாஸ்,	கோயமுத்தூர்	5-0—0
தி. மு. க.—சுல்தான்பேட்டை கிளை		12-0—0
அண்ணாத்துரை தி. மு. க.—பாளையங்கோட்டை		10-0-0
		683—3 0

பாதிரிகளுடன் போலீஸ் சர்க்கார் உடன்படிக்கை

ரோம். ஏப். 17—

கத்தோலிக பாதிரிகளுடன் போலீஸ் சர்க்கார் உடன்படிக்கை ஏற்பட்டுவிட்டது என்று, வார்ஸா ரேடியோ அறிவித்துள்ள செய்தியை அப்படியே நம்பிவிடவேண்டாம் என்று வாடிகன் அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரி செய்தி பலதடவை கிடைத்ததாகவும், பல தடவைகளிலும் அவை உண்மையல்ல என்று தெரியவந்ததாகவும் கூறப்படுகிறது.

இச்செய்தி உண்மையாக இருக்க வேண்டும் என்றால், அடிப்படை உரிமைகள் சர்ச்சிற்கு போலீஸ் சர்க்கார்அனுமதித்திருக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.

போலீஸ் சர்க்கார் தூதர்கள் இப்பொழுது வாடிகனின் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறர்கள்.

பிரிட்டனின் பெரிய விமானம்

லண்டன், ஏப். 16—

பிரிட்டனின் ராக்ஷஸ விமானமும் உலகிலேயே மிகப் பெரிய விமானமுமான பிரபாஸான் ஆகஸ்டில் அட்லாண்டிக்கை கடக்க விருக்கிறது.

இதில் 120 பிரயாணிகள் தங்கள் சாமான்களுடன் பிரயாணம் செய்யலாம்.

நன்றியறிவிப்பு

திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக இந்துச் சட்டத் தொகுப்பு மசோதாவுக்கு ஆதரவாக சென்னை கோகலே மண்டபத்தில் 12-4-50-ல் நடைபெற்ற திராவிட பெண்கள் மாநாட்டை மிகச் சுருங்கிய காலத்திற்குள் ஏற்பாடு செய்ய வேண்டியதாயிருந்தும், அதை வெற்றிகரமாக நடத்த உதவிய எல்லாப் பெண் தோழியர்கட்கும், சிறப்பாக, தம் தள்ளாத உடல் நிலையிலும் மாநாட்டிற்கு வந்து ஆர்வத்துடன் வரவேற்புரையாற்றிய டாக்டர் தர்மாம்பாள் அவர்களுக்கும், தம் பல வேலைகளுக்கிடையிலும் தொலைவிலிருந்து அழைப்பை ஏற்று வந்து தலைமை தாங்கி வீரமுரை யாற்றிய வீர அன்னையார் மூவாலூர் இராமாமிர்தத்தம்மையார் அவர்கட்கும் சொந்த வேலை கட்டிடையில் நாட்டுவேலையும் பெரிதாகக்கொண்டு ஆர்வத்துடன் கல்லுரையாற்றியதோழியர் ஜோதீஸ்வரி அம்மையாருக்கும், சிறப்புரையாற்றிய வீராங்கனை வெற்றிச்செல்வி அன்பழகன் அவர்கட்கும் மற்றும் தீர்மானங்களைக்கொண்டு வந்தும், ஆதரித்தும், பேசியவர்கட்கும் தொண்டாற்றியுதவிய தோழியர்கட்கும் என் உளமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன். இயக்கத்துக்காகவும், முன்னேற்றத்திற்காகவும் இதுபோலவே ஆர்வத்துடன் அவ்வப்போது வந்து ஊக்குமாறு வேண்டிக் கொள்கிறேன். வணக்கம்!

அலமேலு அப்பாத்துரை
செயலாளர்
தி. மு. க. பெண்கள் மாநாடு

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

21-4-50

நாகர்கோவில்:—மு. கருணாநிதி, கி. மனோகரன், வை.நீசுப்ரமணியம்.

22-4-50

முன்னிப்பட்டு :—புலவர் கோவிந்தன், சி வி. குப்புசாமி.

கழக நடவடிக்கைகள்

திருச்செங்கோடு:—5—4—50 அன்று தி. மு. க. கிளையின் செயற்குழு அவசரக்கூட்டம் தோழர் வீ. சங்கரன் தலைமையில் நிகழ்வுற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

பொதுச்செயலாளர் சி. என். ஏ. அவர்கள் அறிக்கைக்கிணங்க தி.மு. கழகத் தலைமைக் காரியாலயம் கட்டட நிதிக்கு இக்கிளைக்கழகத்தின் சார்பாக ரூ. 10 அனுப்புவதென்றும், அதனை ஆதரவாளர்களிடம் நன்கொடையாகப் பெறுவதென்றும் முடிவு செய்யப்பட்டது.

டை தொகையை வசூல் செய்யும் பொறுப்பை தோழர் வீ. சங்கரன் (வி-உ) அவர்களிடம் ஒப்புவித்து, அதற்கான விபரம் கொடுக்கக் கேட்டுக்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

* * *

அரக்கல் தருகம்:—2—4—50 அன்று இரவு தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது செயற்குழுவைக் கீழ்கண்டவாறு மாற்றி அமைக்கப்பட்டது.

செயலாளர் — ஆர். இரங்கசாமி துணைச் செயலாளர்—என். மாணிக்கம்; பொருள் உறுப்பினர்—ஆர். பாலகிருட்டினன்; விளம்பர உறுப்பினர்—எம். செக்காரம். பிறகு சில அனுதாபத் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடைசியாகக் கூட்டம் செயலாளர் நன்றிகூறலுடன் இனிது முடிந்தது.

* * *

குல்லலக்குண்டு:— 9—4—50 அன்று மாலை இவ்வூர் கழகத் துவக்கவிழா தோழர் இ. சாத்தான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் சி. பி. சிற்றரசு, சையத் இப்ராகிம், என். முத்து ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக்கழகத்தின் நோக்கம், சமுதாயம், அரசியல் கொள்கைகளில் உள்ளவைபற்றியும் விரிவாக சொற்பொழிவாற்றினார்கள்.

* * *

கடைநல்லூர்:-தி.மு.க. செயற்குழுக்கூட்டம் தோழர் துரைசாமி. அவர்கள் தலைமையில் 3—4—50 அன்று இரவு நடைபெற்றது.

தோழர்கள் சி. நடராஜன் ஆ. திராவிடமணி ஆகியோர் உறுப்பினர்களின் பொறுப்பு பற்றி சிறிது நேரம் சொற்பொழிவாற்றினார்கள்.

பின் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

இவ்வூருக்கு வரவிருக்கும் தோழர் என். எஸ். கே. அவர்களுக்கு வரவேற்பு அளித்தல். தோழர் க. அன்பழகன் அவர்களைக் கொண்டு கூட்டம் நடத்துதல். தலைவர் முடிவுரை கூற, செயலாளர் நன்றிகூறலில் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

ஆரணி:-8 4-50 அன்று நகர தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் சி. செயராமன் அலுவலகத்தில், தோழர் ரா. குட்டி அவர்கள் தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. வ. ஆ. மாவட்ட தி. மு. க. செயற்குழுவிற்கு தோழர்கள் அ. சி. ராதாகிருஷ்ணன். கோ. கேசவன் ஆகியோரைத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

தி. மு. கழகத் தலைமை நிலையக் கட்டிட அமைப்பு செலவு நிதிக்காக வசூல் செய்வதற்குத் தோழர்கள் வி. பாலகிருட்டினன், டி. டீ. அரசு ஆகியோரை நியமிக்கப்பட்டது.

கழகத்தின் விளம்பர உறுப்பினர் தோழர் பி. கன். ராமகிருஷ்ணன் சென்னை சென்றுவிட்டபடியால், தற்காலிகமாக தோழர் வி. பாலகிருட்டினன் அவர்களை விளம்பர உறுப்பினராக நியமிக்கப்பட்டது. அதிகமாக உறுப்பினர்களைச் சேர்த்து பொதுக் கூட்டம் கூட்டி 1950-ம் ஆண்டுக்குப் புதிய செயற்குழுக் கமிட்டியை விரைவில் மாற்றி அமைப்பதென தீர்மானிக்கப்பட்டது.

* * *

திருப்பத்தூர்:—9-4-50 அன்று காலை வாசிக்சாலை தெரு, எண் 10 உள்ள தோழர் எஸ். ராஜன் அவர்கள் இல்லத்தில், தி. மு. க. நிர்வாக உறுப்பினர் கூட்டம், தோழர் பி. ஆர். ஏ. இளம்பிறை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுபோது தி. மு. க. தலைமைக் காரியாலயக் கட்டிட நிதிக்கு இவ்வூர் தி. மு. க. சார்பாக ரூ. 11 0-0 அனுப்புதல் என்று தீர்மானிக்கப்பட்டது. நன்றிகூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

நெல்லிக்குப்பம்:—தோழர் நரசிம்மன் பேட்டை வீட்டில், தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் 9 4-50 அன்று ஆசிரியர் தோழர் வடிவேல் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்கண்ட தீர்மானங்கள் முடிவு செய்யப்பட்டது. மே மாதம் முதல் வாரத்தில் தி மு. கழகத் துவக்க விழாப்பொதுக்கூட்டத் தமிழகப் பேச்சாளர்களைக் கொண்டு நடத்துவதெனவும், அதற்காகநன்கொடை வசூலிப்பதற்கு தோழர்கள் சி. இளவழகன் வேலாயுதன், தமிழ் அன்பன், இரா-கோபால், இவர்களை செயற்குழுக் கூட்டம் கேட்டுக்கொண்டது. மற்றும் உடனடியாக அங்கத்தினர் சேர்க்கும்படி செயற்குழுவைக் கேட்டுக்கொண்டது.

* * *

ஆம்பூர்:—9-4-50 அன்று காலை தோழர் கணேசன் கடையில், தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தோழர் கோவிந்தசாமி தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

விரைவில் கழகப் பேச்சாளர்களை அழைத்து ஓர் பொதுக் கூட்டம் நடத்துவது.

பிரசாரக்குழு நிலையத்திலிருந்து வந்த அறிக்கையின்படி ஆவன செய்வது. செயலாளர்தோழர்ரங்கநாதன் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

* * *

கோவை:—9—4—50 காலை தோழர் சின்னதுரை அவர்கள் தலைமையில் சொற்பயிற்சி மன்றம். கோவை தி. மு. கழகத்தில் கூடியது. அதுபோது ‘அழகிரி நினைவுநாள்’ நடைபெற்றது. தோழர்கள் நடராசன், இளங்கோ, ஆறுமுகம், செழியன் முதலியோர் அழகிரியின் தொண்டைப் பற்றிப் பேசினர். தோழர் சேலம் அ. சித்தையன் தற்போதைய நிலையில் மாணவர் கடமை’ என்ற தலைப்பில் மாணவர்களுக்கு அறிவுரையாற்றினார். பின்னர் அரசியல் கல்லூரித் தோழர் அ. ச. நடராசன் இந்து சட்டத்திருத்த மசோதா ஆதரிக்கும் தீர்மானம் கொண்டுவர, அது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின்தோழர் பு. ஜெயபால் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

ஐக்கிய தொழிற் சங்க ஸ்தாபனம்

கம்யூனிஸ்ட்காரியதரிசி யோசனை

பம்பாய், ஏப். 13—

இந்திய தொழிலாளர்களுக்கு ஐக்கிய மத்திய தொழிற்சங்க ஸ்தாபனம் ஏற்படுத்த அ. இ. தொ. ச. கா. ஹிந்த் மஜ்தூர் சபை, இந்திய தொழிற்சங்கக் காங்கிரஸ் மூன்றும் கூட்டாக ஒரு கூட்டம் நடத்த வேண்டும் என அ. இ. தொ. ச. கா. உதவிக் காரியதரிசி பி. பி. ரங்னேகர் ஆலோசனை கூறியிருக்கிறார்.

கட்டிடம்!

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

தலைமைக் காரியாலயம்! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறாது என்று அனைவரும் கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே!

வற்புறுத்திய நண்பர்களே!

ஆர்வம்காட்டிய அன்பர்களே!

யோசனை கூறிய தோழர்களே!

அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

உள்ளூர் தபால் பட்டுவாடாப் பகுதிகள்

“லோகல்” எல்லை சந்தேக விளக்கம்

சென்னை, ஏப். 14—

“உள்ளூர்த் தபால்” பட்டுவாடா விஷயமாக சமீபத்தில் வெளி வந்த பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் சில ஊர்களைக் குறிப்பிடும்போது “லோகல் டெலிவரி” பிரதேசம் என்று அறிவிக்கப்பட்டிருந்த பிரதேச எல்லைகளுக்குள் அடங்கிய அல்லது சார்ந்தாற்போலுள்ள சில இடங்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்பதாகச் சிலர் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதித் தெரிவித்திருக்கிறார்கள். உதாரணமாக, லாலிரோட் கோயம்புத்தூர் நகரசபைவிடைக்கியி குப்பியும், கோயம்புத்தூர் உள்ளூர் தபால் பட்டுவாடா பிரதேசத்தில் அது குறிப்பிடப்படவில்லை என்று ஒருவர் கூறியிருக்கிறார். லாலிரோட் கோயம்புத்தூர் நகரசபை எல்லையில் அடங்கியதாயிருப்பதால், அதை தனிப்பட எடுத்துக் காட்டவேண்டிய அவசியமே இல்லை என்று கூறி இச்சந்தேகத்தை உடனடியாக நிவர்த்தித்து விடலாம். முந்திய பத்திரிகைக் குறிப்பில் உள்ளூர் பட்டுவாடா (லோகல் டெலிவரி) பிரதேசம் என்றால் என்ன என்பது பற்றித் தந்திருக்கும் விளக்கத்தில், ஒரு நகரசபையின் எல்லைகளுக்குள் அடங்கியிருக்கும் எந்தப் பிரதேசமும் டை நகரசபையின் எல்லைகளைத் தொட்டு நிற்பதாகவும், அந்நகரசபையின் எல்லைகளுக்குள் இருக்கும் எந்தத் தபால் நிலையத்தின் மூலமாகவாவது தபால்கள் பட்டுவாடா ஆகிக்கொண்டிருப்பதாகவும் உள்ள எந்தப் பிரதேசமும் அந்த ஊரின் உள்ளூர்த் தபால் பட்டுவாடா பிரதேசத்தில் அடங்கும் என்பது எடுத்துக் காட்டப்பட்டிருந்தது.

டை பத்திரிகைக் குறிப்பில் கோயம்புத்தூர் லாலிரோட் விஷயத்திற்போல் இதரப் பிரதேசங்கள் விஷயத்திலும், மேற் கூறிய காரணத்தை உத்தேசித்து, சில இடங்கள் பெயர் குறிப்பிடப்படாமல் போயிருக்கலாம். அத்தகைய விஷயங்களில் எல்லாம், உள்ளூர்த் தபால் பட்டுவாடா பிரதேசம் பற்றி இக்குறிப்பில் விளக்கியிருக்கிற விவரப்படி “உள்ளூர்” என்பதைப் பொது மக்கள் அர்த்தம் செய்து கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது.

சர்வதேச சிறுகதைப் போட்டி

சென்னை, ஏப் 15—

நியூயார்க் ஹெரால்ட்-டிரிபியூன், என்ற அமெரிக்க தினசரியின் ஐரோப்பிய வெளியீட்டுக் காரியாலயத்தினர் சர்வதேச சிறுகதைப் போட்டியை ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

பல்வேறு நாடுகளில் 1950 ம் ஆண்டில் எழுதப்படும் சிறு கதைகளில் 52 ஐப் பொறுக்கி எடுத்து ‘1950 ல் உலகின் தலை சிறந்த சிறு கதைகள்’’ என்ற பெயரில் வெளியிடுவது அவர்களுடைய திட்டம்.

பரிசு பெறும் ஒவ்வொரு கதைக்கும் 50·0 டாலர் (ரூ. 23,750) வீதம் 52 பரிசுகள் வழங்கப்படும்.

ஒவ்வொரு தேசத்திலும் கதைகளைச் சேகரித்து ஆராய்ந்து பார்த்து, அந்த தேசத்தின் தலை சிறந்த நான்கு கதைகளைப் பொறுக்கி எடுத்து மத்திய காரியாலயத்துக்கு அனுப்புவார்கள். ஒவ்வொரு தேசத்திலும் இதற்காக ஒரு சஞ்சிகை அல்லது பத்திரிகை பொறுக்கியெடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் புதுடில்லியிலுள்ள “ஹிந்துஸ்தான் டைம்ஸ்’’ காரியாலயத்தினர் கதைகளை வரவழைத்து பரிசீலித்து பொறுக்கி எடுப்பார்கள். ஏப்ரல் 30 ந் தேதி முதல் 4 மாதத்துக்குள் கதைகள் அனுப்பப்படவேண்டும்.

கதைகளைப் பற்றிய நிபந்தனைகளையும் விவரங்களையும் அறிய விரும்புவோர் ‘‘உலக சிறுகதை’’ போட்டி ஹிந்துஸ்தான் டைம்ஸ்’’ புதுடில்லி, என்ற விலாசத்துக்கு எழுதிக்கேட்டுக் கொள்ளவேண்டும்.

இலங்கையில் ‘‘டைம்ஸ் சிலோன் காரியாலயத்தின’’ருக்கு எழுத வேண்டும்.

பாங்கிகளும் கடைச் சிப்பந்திகள் விடுமுறைச் சட்டமும்

சர்க்கார் விளக்கம்

பாங்கிகளில் ஞாயிற்றுக்கிழமை யன்று கொடுக்கப்படும் விடுமுறையை, கடைச்சிப்பந்திகளின் விடுமுறை சட்டத்தின் கீழ் கொடுக்கப்படுகிற விடுமுறையாக மதிக்கலாமென்று சென்னை சர்க்கார் ஒரு விளக்கம் கூறியுள்ளனர். கம்பெனி சட்டத்தின் கீழ் பாங்கிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறையளிக்கப்படுகிறது. கடைச் சிப்பந்திகள் சட்டத்தின்கீழ் அந்த விடுமுறை வாராதால் பாங்கி சிப்பந்திகளுக்கு தனியாக வாரத்தில் மற்றொரு தினம் விடுமுறையளிக்கவேண்டுமோ என்றசந்தேகம் தோன்றியது. அந்த சந்தேகத்தைப் போக்கி சர்க்கார் மேற்கண்ட விளக்கத்தை அனுப்பியுள்ளனர்.

புதிய நூல்கள்

அண்ணாதுரை

தோழமையா? விரோதமா?	0—4—0
தேவ லீலைகள்	0—8—0
நாடும் ஏடும்	0 6—0
பாரதியார்	0—6—0
அற நிலையங்கள்	0—6—0
சிங்கார வேலர்	0—4—0
மறு மலர்ச்சி	0 4—0
பொருள்	0—4—0
நூல் நிலையங்கள்	0—3—0
அண்ணாவின் அறைகூவல்	0—3—0
,, வர்ணனைகள்	0—3—0
,, அடுக்குத் தொடர்	0—3—0

நெடுஞ்செழியன்

புதிய பாதை	0—8—0
கம்பரும் வம்பரும்	0—4—0
மக்கள் மறுமலர்ச்சி	0—3—0
மனப் போக்கு மாற வேண்டும்	0 -2—0
சமத்துவம்	0—2—0

கருணாநிதி

தூக்குமேடை	1—4—0
வாழ முடியாதவர்கள்	0- 12--0
பெரிய இடத்துப் பெண்	0—8—0
சங்கிலிச்சாமி	0—8—0
பலிபீடம் நோக்கி	0—6—0
கயிற்றில் தொங்கிய கணபதி	0—3—0

பிற நூல்கள்

நடன சிங்காரி (சுவையான ரஷ்யக் கதை)	0—8—0
அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி	0 - 8—0
திருக்குறள்ஏன் தேவை?	0—3—0
கலியாணமாய்விட்டதா?	0 - 3—0
யார் அழிவுக்காரி	0—3—0
அழகா? அன்பா?	0—3—0
பரமசிவனுக்கு பகிரங்கக் கடிதம்	0—3—0
அவதூறு வழக்கு	0—3—0
சதிகாரச் சாமியார்	0—8—0
ஏ சதிகாரச் சமுதாயமே	0—2—0

விற்பனைக் கழிவு 25% செலவு இல்லை.

தனிப் புத்தகத்திற்குத் தபால் தலைகள் அனுப்பவும்.

முன்னேற்றப் பண்ணை
118, பிராட்வே. சென்னை —1

அரண்மனையை பார்க்க வரி!

லண்டன், ஏப். 17—

தன் அரண்மனைக்கு வரி அதிகமாகப் போடப்பட்டுவிட்டதால், அதைக் கட்ட போதிய வருமானம் பெறுவதற்காக அப்புராதன அரண்மனையைப் பொதுமக்கள் ஒரு சிறிய கட்டணத்தொகையைக்கொடுத்துப் பார்க்க மார்ட்ரோ கோமகன் ஏற்பாடு செய்திருக்கிறார்.

தினந்தோறும் 1500 பேர்களுக்கு மேல் இந்த அரண்மனையைச்சுற்றிப் பார்த்து வருகிறார்கள் என்றும், இதனால் ரூ. 2600 தினம் வரும்படி கிடைக்கிறதென்றும் கூறப்படுகிறது.

மார்ல்பரோ சீமாட்டியும், குடும்பத்தினரைச் சேர்ந்த இதர மெம்பர்களும் அரண்மனையைப்பார்க்க வருபவர்களைச் சுற்றிக்காட்டி உதவி செய்து வருகின்றனர்.

பந்தயக் குதிரைகள் “ரிடைய”ராகின்றன!

லண்டன், ஏப். 17—

மிகவும் வயதாகிவிட்ட பிரிட்டிஷ் பந்தயக் குதிரைகள் இனி பந்தயத்தில் அனுமதிக்கப்படமாட்டாது. அவை ஓய்வு பெற லண்டனிலிருந்து அனுப்பப்படுகின்றன.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.